RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s138

# முதுமொழிக்காஞ்சி உணர்த்தும் அறங்கள்

இரா. தமிழரசி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஏ.இ.டி. மகளிர் கல்லூரி, சேலம்-636108, தமிழ்நாடு, இந்தியா.

# The Virtues indicated by Muthumozhi Kanchi

R. Tamilarasi [a, *]

[a] Department of Tamil, A.E.T. Women's College, Salem-636108, Tamil Nadu, India

* Corresponding Author: tamilarasi14041@gmail.com

Received: 21-06-2022
Revised: 23-08-2022
Accepted: 06-09-2022
Published: 19-11-2022

Check for updates

**ABSTRACT**

Virtue is cutting out the bad from life and taking only the good. It refines and moralizes human life. The principle of virtue is to make man human. Although man is aware of all the virtues, he is unable to adhere to them under certain circumstances. Thus, the period when he ruled in defiance of justice, righteousness, and honesty was a dark period. As a result, the poets of that time, seeing this, were eager to teach them the virtues through the Pathinenkilkanakku books. They did not have the time to sing about love and war like the poets of the Sangam age. There is not even an environment for that. One of those books, Muthumozhi Kanchi, has been written entirely by Gudalur Kizhar, keeping in mind the doctrine of morality. Therefore, this article deals with the ethical ideas expressed in the Sangam Maruviya Kaalam (Dark period of Sangam) moral book, The Muthumozhi Kanchi.

**Keywords:** Eighteen Lesser Texts, Muthumozhi Kanji, Aram, Sangam Maruviya Period

## முன்னுரை

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதி நூல்களில் ஒன்றே முதுமொழிக் காஞ்சி ஆகும். இந்நூலைக் கூடலூர்க் கிழார் என்பவர் இயற்றியுள்ளார். இவரின் அற நூலில் கூறும் அறன் வலியுறுத்தும் விடயங்கள் பற்றி கூறுவதே இந்த கட்டுரையின் நோக்கமாகும். 'அறம் வலியுறுத்தல்' என்பது மனித நிலைப்படுத்தலுக்குரிய கருவியாக கையாளப்படுவது என்று சுட்டப்படுகிறது. (Chandrasekaram, 2021). மனித வாழ்வில் நதி போன்ற ஓட்டத்தை, இது போன்ற நூல்கள் இரு கரைகளாய் அமைந்து நல்வழி படுத்துகின்றன என்பதை அறியலாம். மனிதக்குழு தனக்குள் உருவாக்கிக்கொள்ளும் நெறிகள் தான் அறங்கள். “செய்யவேண்டியவை, செய்யக்கூடாதவை, செய்தே ஆக வேண்டியவை அடங்கிய ஒரு வழிகாட்டித்தொகையே அறம்” என்று கூறப்படுகிறது (Jeyamohan, 2019).

## ஆய்வு முறை

செவ்விலக்கியங்களில் காணலாகும் இலக்கிய கோட்பாடு என்னும் பொருண்மையில் இக்கட்டுரை அமைந்துள்ளது. இதற்காகச் செவ்விலக்கியங்களுள் ஒன்றாகிய சங்க மருவிய கால இலக்கிய நூலான முதுமொழிக் காஞ்சி, முழுவதுமாக வாசிக்கப்பட்டது. அந்நூல் கூற விழைந்த கருத்துகளைச் சில பிரிவுகளாகப் பிரித்து, அதன் அடிப்படையில் பிற அறிஞர்கள் கூறிய கருத்துகளையும், இதர ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வாசிக்கப்பட்டு தக்க இடத்தில் மேற்கோள்

காட்டப்பட்டுள்ளது. பாடல் அடிகளாலும் அறக் கோட்பாட்டுக் கருத்துகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் பொருண்மை, வாழ்வியலுக்குத் தேவையான கருத்துகளை பட்டியலிட்டுக் கூறுகிறது.

## முதுமொழிக் காஞ்சி

முதுமொழிக் காஞ்சி என்பது நிலையாமையை உணர்த்தும் உலகியல் அனுபவம் உணர்த்துதலால் இப்பெயர் பெற்றதாம் (Vimalanandhan, 2018). இது மொத்தம் நூறு குறள்வெண்செந்துறை என்னும் பா வகையால் அமைந்தது. அவை அனைத்தும் பப்பத்துப் பாடல்கலாய்ப் பிரிக்கப்பட்டு பாடலில் முடியும் சொல்லை கொண்டு பத்துகளின் தலைப்புகள் அமைகிறது. இந்நூலின் ஒவ்வொரு பத்தும் 'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்' என்று தொடங்குவது இதன் சிறப்பு.

## ஈகையில் அறம்

மனித வாழ்வில் தவிர்க்கமுடியாத எக்காலத்திலும் வற்புறுத்தப்படும் அறமானது ஈகை தான். அறத்தினில் மேன்மை உடையதும் ஈகையே. "இல்லாமையுடைய ஒருவருக்கு யாதேனும் ஒன்றை கொடுப்பது ஈகை" என்பர் (Chandrasekaram, 2021). அந்த ஈகைக்கு முதற்படியாய் அமைவது பிறர் வருந்துவதைக் கண்டு வருந்துதல் என்பதனை வலியுறுத்தி காதலினும் சிறந்தது பிறர் வருந்துவதைக் கண்டு அஞ்சுதல் என முதுமொழிக்காஞ்சியின்,

"காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்"

என்ற வரிகள் கூறுகிறது. ஒருவன் பிறர்க்குக் கொடுக்கும் கொடையினாலே அவன் ஈரமுடையவன் ஆகிறான் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). அதனாலேயே அவன் பெருங்குடியில் அவதரித்தமை விளங்கும் என்பதனை அறிவுப்பத்து மொழிகிறது.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்

பேரிற் பிறந்தமை யீரத்தி னரிப

ஈர முடைமை யீகையி னரிப"

அந்த ஈகையும் நெறிமுறைகளை பின்பற்றி அறத்துடன் கூடியதாய் இருக்கவேண்டும் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). ஈகைக்காய் தீயவழியைத் தேர்நதெடுத்து நடப்பது ஈகையாகாது எனவும், ஈகை என்னும் அறத்தைக் கூட அறத்தொடு செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது முதுமொழிக்காஞ்சி. இப்படியான பெரும் பேறு கொடுக்கும் ஈகை என்னும் அறத்தைச் செய்யாதவனின் கரங்கள், வேறு எந்தப் புகழையும் தாங்கக் கூடிய அளவிற்கு சக்தி பெற்றவை அல்ல என்பதை,

"சோரக் கையன் சொன்மாலை யல்லன்"

என்ற அல்ல பத்துவின் வரிகள் உணர்த்துகின்றன (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). ஈகையை இவ்வாறு வலியுறுத்தினும், அந்த ஈகைக்கான வழிமுறைகளையும், ஈகை தனக்கான பெருமையைச் செம்மையை இழக்காமல் இருக்காவும் முதுமொழிக்காஞ்சி இன்னுமோர் ஈகைக்கான அறத்தை வலியுறுத்தாமல் இல்லை. ஈகை செய்தால் புகழ் கிடைக்கும், பேறு கிடைக்கும், நற்கதி கிட்டும் என பலநூல்களும், சான்றோர்களும் கூறினாலும், அதனை விருப்பமில்லாமல் வெறும் புகழுக்கு மட்டுமே செய்பவரைக் கடிந்து, இதற்குப் பதில் இரப்பவருக்கு இல்லை என்று சொல்வதே மேல் எனப்

"பேணி லீய்கை மாற்றலிற் றுவவ்வாது"

துவ்வா பத்துவின் பாடல் வரிகள் கூறுகிறது (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010).

## கற்றலில் அறம்

கல்வி மாற்றும் அதன் மேன்மை குறித்தும் அதனின் அவசியம் குறித்தும் தற்கால சான்றோர்களைக் காட்டிலும் இருண்ட காலத்தில் எழுந்த இந்த நீதி நூலான முதுமொழிக்காஞ்சியில் கல்வியின் பெருமை குறித்து விளக்கப்பட்டுள்ளது. "கல்வி என்பதற்கு மனிதனின் உள்ளத்தினுள்ளே மறைந்து இருக்கும் சிறப்பு பண்புகளை, நாகரிகத்தை, கலையை, கலாசாரத்தை, அன்பை, பண்பை தோண்டி வெளிக் கொணர்ந்து அதை அனைவர்க்கும் பயன்பட, பகிர்ந்தளிக்கும் வகை செய்வது" என்று கூறுவர் (Elango, 2021). ஒருவனுக்கு உயர்குடிப்பிறப்பைக் காட்டிலும் கல்வி தான் சிறந்ததும் என முதற்பத்தான சிறந்தபத்தில் சிந்தி இருக்கிறது சமத்துவ முத்தாரம். அதன் வரிகளாவது,

"குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று"

அதே சிறந்த பத்தில் கற்றதை விட, மென்மேலும் பல நூல்கள் கற்பதை விட, கற்றதை மறவாமல் இருப்பதுதான் சிறந்தது என்ற வரி இடம்பெற்றுள்ளது (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). கல்வி என்று வந்துவிட்டால் வெறும் நூல்களை வைத்தே முற்றுப்புள்ளி பெறுவதன்று. அது பல்கிப் பெருகி முடிவொன்றும் இல்லாத நீள்நெடு பாதையில் தன்னால் இயன்ற தூரத்திற்கு இழுத்துச் செல்பவர் ஆசிரியர் தான். எனவே கற்றலை விரும்புபவன், அதனை கற்பிக்கும் ஆசிரியருக்கும் அதற்குரிய வழிபாட்டினை தவறாமல் செய்வான் என்பதை, தண்டா பத்துவின் பாடல் மூலமாகக் கூறுகிறார் ஆசிரியர் கூடலூர்க் கிழார்.

"நிற்றல் வேண்டுவோன் றவஞ்செய றண்டான்"

தெய்வத்தையோ, ஆசிரியனையோ அரசனையோ காணப்போனால் வெறுங்கையோடு போகல் ஆகாது என்பது தமிழர் மரபு (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). அப்படி ஆசிரியனுக்கு ஏதேனும் ஒரு பொருளை கொடுக்காமல் கற்கும் கல்வி கவியல்ல என்பதை

"தேறாமல் கற்றது கல்வி யன்று"

என்ற அல்ல பத்துவின் பாடல் கூறும் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010).

## நட்பில் அறம்

ஒருவரோடு ஒருவர் பேசி சிரித்தும் மகிழ்ந்தும், இன்பத்திலும் துன்பத்திலும் தேயாத முழுமதியாய் ஒளிர்வதே நட்பு. தாழ்வுணர்ச்சிகளை அகற்றி, நாம் தவறு செய்யும் பொது சுட்டிக்காட்டவும், ஆசிரியருக்கு அடுத்த படியில் அமர்ந்து ஆராதிக்கவும், வெற்றி தோல்விகளில் ஊக்குவிப்பது நட்பு. அவ்வகை நட்பில் எவ்வகை நட்பு சிறந்த நட்பு, யார் உண்மையான நண்பன் என்பதை கண்டறிய முதுமொழிக்காஞ்சியின் அறிவு பத்து நமக்கு தெரிவு செய்கிறது. நமக்கு ஆபத்து நேரும் காலத்திலும் அவசரங்கள் நிகழும் காலத்திலும் நமக்கும் உதவும் நட்பே சிறந்த நட்பு என்பதை,

"சோரா நன்னட் புதவியி னரிப"

என்ற வரிகள் நட்பின் அறத்தை வகுக்கிறார் கூடலூர்க் கிழார் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). இதனை வள்ளுவரும் நட்பாராய்தலில்,

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை

நீட்டி அளப்பதோர் கோல்"

என்ற குறள் வழிக் கூறுகிறார்.

சிறந்த நட்பு எதுவென தேர்ந்தெடுத்தாயிற்று (Namakkal Kavignar, 2002). அடுத்த கட்டமாக அவரும் நாமும் ஒத்த மனமுடையவராக இருத்தல் வேண்டும். "காதலுக்கு மட்டுமன்றி நட்புக்கும் ஒத்த உணர்ச்சி தேவை" என சுட்டப்படுகிறது (Raaji, 2018). அப்படி ஒற்றுமை இல்லாத மனமுடையோன் நண்பனாகமாட்டான் என்பதையும் அல்லப்பத்து கூறுகிறது.

"நேர நெஞ்சத்தோ னட்டோ னல்லன்"

அதே போல் மனதில் ஈரமில்லாத நட்பு நட்பில்லை என்கிறார் கூடலூர்க் கிழார் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). நெருங்கி உணர்வு ஒன்றுபட்டு பழகியப்பின் அந்த நட்பு குறித்த கண்ணோட்டத்தையும், நண்பனைப் பற்றி சிந்தை மாறுதல் கொடுமை என்கிறார் ஆசிரியர். அதனை,

"கொண்டுகண் மாறல் கொடுமையிற்றுவ்வது"

என்ற துவ்வா பத்து வரிகள் மூலம் குறிப்பிடுகிறார் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). இது போன்றை சிறந்த நட்புகளைத் தேர்ந்தெடுக்காமல், கனியிருப்ப காய் கவர்ந்தது போல், அறிவில்லாதாரோடு அல்லது எது நல்லது எது என அறியாதவனுடனான துணை கொள்வதைக் காட்டிலும், தனிமையே இனிமை என்கிறது துவ்வாபத்து.

"அறிவிலி துணைப்பாடு தனிமையிற் றுவ்வாது" (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010)

## பகையில் அறம்

மனித வாழ்வில் அனைவரும் சந்தித்தே ஆகவேண்டிய விடயம் பகை. இந்த பகை ஒருவனை மென்மேலும் மெருகேற்றவும் செய்யும், வேரோடு பெயர்த்து வீசவும் செய்யும். பிணக்கும் வஞ்சமும் பகைக்கு இருக்கும் இரு வதனங்கள். முதுமொழிக்காஞ்சியின் நல்கூர்ந்த பத்து, பாதுகாப்பின்றி ஒருவன் மற்றோருவனை பகைத்துக்கொள்ளக் கூடாது என்று கூறும். மேலும் காரணமின்றி அவசியமின்றி பகைக்கும்குணம் கொண்டவர்களுக்கு போரும் சண்டைகளும் அவர்களின் நடைபாதையில் மிக அண்மையில் இருக்கும் என்பதை,

"உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது"

என்ற வரிகள் கூறுகின்றது (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). இவை அனைத்தையம் கடந்து, நம்முடன் பிணக்கு கொண்டவர்களை எப்படி ஆரோக்கியமாக அணுகுவது என்பதை பற்றி சிறந்த பத்து கூறுகையில் அவர்களை அணுகி மேலும் அந்த பகை என்னும் யாக அணலை வளர்க்காமல் நாம் நம்மை செம்மையாக்கி கொள்ளுதல் சிறந்தது என்கிறது.

"செற்றாரை செறுத்தலிற் றற்செய்கை சிறந்தன்று"

என்று இவ்வரிகள் பகையை கையாலும் ஒரு நல்ல அறம் வலியுறுத்தல் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010).

## உணவில் அறம்

உணவே மருந்து என்ற நிலை மாறி இன்று மூன்று வேலை உணவிற்கு முன்னும் பின்னும் மாத்திரைகளை உட்கொள்ளும் நிலையில் இருக்கிறோம். அளவிற்கு மீறிய அமுதமும் நஞ்சாகும் போது உணவிற்கு மட்டும் விதிவிலக்கில்லை. "நவீன மருத்துவத்தில், மருத்துவ ஊட்டச்சத்து சிகிச்சை என்பது இப்போது எல்லா நோய்கட்கும் உணவுக்கட்டுப்பாட்டை வலியுறுத்தி வருகின்றது. அதன் அடிப்படையே செய்யும் வேலைக்கும் உடல் வன்மைக்கும் ஏற்ற உணவைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதுதான்" என சுட்டப்படுகிறது (Sivaraman, 2018). இதைப்போல், உணவு தேவைக்கு அதிகம் விரும்பி உண்பவர்களுக்கு நோய் உண்டாகும் என்பதை,

"உண்டி வெய்யோர்க் குறுபிணி யெளிது"

என்ற வரிகள் மூலம் சங்கம் மருவி இருண்டுபோன காலத்திலேயே ஈராயிரம் ஆண்டுகள் எரியும் அணையா விளக்கை ஏற்றி வைத்துவிட்டார் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010).

ஆரோக்கியத்திற்கு மட்டுமில்லாமல் அழகிற்கும் தேகப் பொலிவையும் விரும்புவோர் அதற்கேற்ற உணவுகளை எடுத்துகொள்ளவர் என்பதை,

"மிகுதி வேண்டுவோன் றகுதி தண்டான்"

என்ற வரிகள் உணர்த்துகின்றன (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). கள் உண்பவர்கள் சோர்வுடையவர்களாகவே இருப்பர் என்பதையும் முதுமொழிக்காஞ்சி வற்புறுத்துகிறது.

## செல்வத்தில் அறம்

முன்பு கூறப்பட்ட ஈகை என்னும் அறத்தை செய்யவே அவதரித்த கரங்கள் தான் இந்த செல்வங்கள். செல்வம் படைத்தவர்கள் அனைவரும் அறங்கள் செய்வதில்லை. தமக்கென்று இருக்கும் செல்வங்களை தமக்காய் வைத்துக்கொள்ளாமல் வாரி இறைத்து வள்ளலாய் மனதில் வேரூன்றி நிற்பவர்கள் கோடியில் ஒருவரே. இப்படியாக வள்ளலாய் வாழாத செல்வந்தரின் செல்வங்கள் பழிக்கப்படின் அது வறுமையிலும் வெறுக்கத்தக்கது என்கிறது.

"பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது"

என்ற என்கிறது துவ்வாபத்துவின் வரிகள் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). இத்தகைய செல்வம் நாம் முன்பு சேர்த்து பல்கிப் பெருகிய செல்வங்களைக் காட்டிலும் அவை வருங்காலத்தில் குறையாமல் இருக்க வேண்டும் என முதற் பத்தான சிறந்த பத்து கூறுகிறது. இதையே செல்வம் சில காலத்தில் தோன்றி மின்னலைப் போல் மறைந்து விடும் என நாலடியார் கூறும்.

"கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி

மருங்கறக் கெட்டு விடும்"

செல்வங்களை சேர்ப்பவர்கள் அனைவரும் நல்வழியில் பொருள் ஈட்டியவர்களா என்றால் அது கேள்விக்குறி தான் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). இதற்கு பொய்ப்பத்து, பொருள் மீது பெரும் ஆசை கொண்டவன் எவ்வித ஒழுங்கான அல்லது நேர்மையான காரியத்தை செய்யமாட்டான் என்பதை,

"பொருணசை வேட்கையான் முறைசெயல் பொய்"

என்ற வரிகளின் மூலம் உணர்த்துகிறது (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). அது போல் பெருஞ்செல்வம் படைத்தவன் கோபம் இல்லாமல் இருக்கமாட்டான் என்பதையும் வலியுறுத்துகிறது. இவைகள் மூலம் ஆன்றோர்கள் ஆற்றுப்படுத்தி வளர்த்த அறங்கள் செல்வம் என்னும் அரக்கன் கையில் சிக்குமாயின் சுக்குநூறாகும் என்பதைக் கூடலூர்க் கிழார் முதுமொழிக்காஞ்சி வழி அறங்களாகப் பொழிந்துள்ளார்.

## இல்லறத்தில் அறம்

தமிழர்கள் தங்கள் வாழ்வைப் பகுத்தபோது சரிபங்கை வாங்கி, சிம்மாசனம் அமர்ந்தது அகம். இல்லறத்தையே செங்கோலாய், கற்பையே முடியாய் இன்றும் மறத்தமிழரிடையே ஆட்சிபுரிந்து வருகிறது. செங்கோலில் மின்னும் மணியாய் இருப்பவள் மனைவியே. மனைவியானவள், இல்லத்தில் கணவனது வருவாயை அறிந்து அதற்குத் தக்கவாறு செலவு செய்யவேண்டும் என்பதை,

"நீரிறிந் தொழுகாதா டார மல்லள்"

என்ற அல்ல பத்துவின் வரிகள் கூறுகிறது (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). மேலும் மங்கையர் தரும் இன்பத்தை மட்டும் கொண்டு வாழ்வில் இன்பம் அடைய முடியாது. அதுவும் நிலையானது அல்ல. அது இளமையின் வயிற்று பசியாம். அந்த இன்பத்திற்ககாகவும், சுகத்திற்காகவும் மனைவியே கதி என்று கிடத்தல் ஆகாது. அவர்களின் சுகத்தை மட்டும் வேண்டுவோன் அவர்களை விட்டு நீங்க மாட்டான் என தண்டா பத்துவின் வரிகள் கூறும்.

"காமம் வேண்டுவோ னின்பந் தண்டான்"

இதை வள்ளுவரும் மனைவியரின் காம இனபத்திற்காக அவர்கள் விரும்பும் படி நடப்பவர்கள் சிறந்த பயன்களை அடைய மாட்டார்கள், சிறந்த செயல்களைச் செய்பவர்கள் அவ்வகை இன்பத்திற்காய் ஏங்க மாட்டார்கள் என்று கூறுகிறார் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010).

“மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்

வேண்டாத பொருளும் அது" (Namakkal Kavignar, 2002)

## இளமையிலும் மூப்பிலும் அறம்

ஒருவருக்கு தேகப் பொலிவும், அறிவுப்பொலிவும் இயற்கையாகவே சுடரொளிக்கும் பருவம் இளமைப் பருவம். எனினும் இளமை மட்டுமே சிறப்புடையது அல்ல. இளமையில் உடம்பு நோயின்றி ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை,

"இளமையிற் சிறந்தன்று மெய்ப்பிணி யின்மை"

என்ற சிறந்த பத்தின் வரிகள் மூலம் கூடலூர்க் கிழார் உணர்த்துகிறார் (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). பகலிற்குப் பின் இரவு போல், இளமைக்குப் பின் முதுமை உண்டு. அலைகள் அலைவீசி ஓய்வது போல் அதுவும் இயற்கை. அந்த மூப்பை மற்றவர் வெறுத்து ஒதுக்குவர். அந்த மூப்பிற்கு உரியவனே அதனை வெறுத்தல், பாம்புடன் கூடி வாழ்தல் போலாகும் என்பதை,

“இழிவுடை மூப்பிர கத்திற் றுவ்வாது”

என்னும் வரிகள் உணர்த்துகிறது (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010). நாலடியாரும், மரண காலத்தில் உதவும் நல்வினை என்னும் கட்டுச்சோற்றை இளமையிலே கைக் கொண்டு உய்வு பெற வேண்டும் என்பதை,

"தோட்க்கோப்புக் காலத்தால் கொண்டுய்மின்"

இவ்வரிகள் மூலம் கூறுகிறது (Padmadevan, 2013). புறநாநூற்று பாடலிலும், யமன் வந்து பற்றும் காலத்தில் வருந்திப் பயனில்லை, இளமையில் நல்லது செய்யாவிடினும் தீமையைச் செய்யாமல் இருக்கவேண்டும் என்பதை,

"நல்லது செய்தலாற்றீர் ஆயினும்,

அல்லது செய்தல் ஓம்புமின்"

ஆகிய இவ்வரிகள் கூறுவதையும் காணலாம் (Paalaiyan, 2018). மேலும் இப்பிறப்பிலேயே, மறுபிறப்பினை தெரிந்து கொண்டு அறத்தின் வழியிலேயே வாழ வேண்டும், அப்படி இல்லாத மூப்பு மூப்பின்று என்று அல்ல பத்துவின் வரிகள் உணர்த்தும்.

"மறுபிறப் பறியா ததுமூப் பன்று" (Govindaraja Muthaliyar, Ramaswamy Naidu, 2010)

## முடிவுரை

இன்றைய அன்றாட வாழ்வில் நிற்கவும் நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் நம் மனித இனம், மனிதம் மாறாமல் வாழ, மனிதத்தோடு கூடிய அறங்களை செய்ய இந்த இருபதாம் நூற்றாண்டிலும் தேவைப்படும் அறக் கருத்துக்களை இக்கட்டுரை முதுமொழிக் காஞ்சி வழி நின்று, பகுத்து வழங்கியுள்ளது. மனிதன் அறத்தொடு வாழும் வகையில் எந்த கல்வி நிலையமும் இன்று வரை திறக்கப்படவில்லை. எனினும் இது போன்ற நீதி நூல்களை கற்றலின் மூலம் நாம் அதன் கருத்துக்களின்பால் ஈர்க்கப்பட்டு அந்த வழிகாட்டுதல்கள் வழியே வாழ்ந்து காட்டவும் வாய்ப்புகள் உண்டு. இக்கட்டுரை மூலம் நாம் ஈகை, ஈகை செய்கை, கல்வி, நட்பு, பகை, உணவு, செல்வம், இல்லறம், இளமை, மூப்பு போன்ற இடங்களில் கடைபிடிக்க வேண்டிய அறங்கள் குறித்து

விரிவாகக்கண்டோம். அறத்தொடு வாழ்பவன் தான் பலர் போற்றும் குணத்தோடு வாழ்கிறான் என்பது முதுமொழிக் காஞ்சி மூலம் அறிய முடிகிறது.

## References


Chandrasekaram, S. (2021) Iniyavai Narpathil Aramum Athigaramum, Neithal, Chennai, India.

Elango, S. (2021) Kalvi Netru Endru Nalai, Paavai Pathippagam, Chennai, India.

Govindaraja Muthaliyar, K.R., Ramaswamy Naidu, K. (2010) Mudhumozhi Kanchi, Sri Senbaga Pathippagam, Chennai, India.

Jeyamohan, (2019) Aramenappaduvadhu Yaadhenil, Bharathi Pathippagam, Chennai, India.

Namakkal Kavignar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Paalaiyan, A.Pa. (2018) Purananuru mulamum uraium, Gowra Pathippagam, Chennai, India,

Padmadevan, (2013) Naladiyar Thelivurai, Karpagam Puthagaalayam, Chennai, India.

Raaji, A. (2018) Valluvar Kattum Natpu, Journal of Indian Studies, 11, 32-41. https://doi.org/10.22452/JIS.vol11no1.3

Sivaraman, Ku. (2018) Nalam kakka vanga valalaam, New Century Book House, Chennai, India.

Vimalanandhan, M.S. (2018) tamil ilakkiya varalatru kalanjiyam, Mulai Nilaiyam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License